Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)



2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 149 | உள்ளூர் - 29.05.2026 | வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 149 | வெளியூர் - 30.05.2026 | சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**திருமண தடைகள் நீங்க பரிகாரங்கள்?**

**தேசிய அலுமினியம் நிறுவன வேலைவாய்ப்புகள்!**

**கர்நாடகத்தில் 4 துணை முதல்வர் பதவி?**

**கியூட் தேர்வுக்கான புதிய தேதிகள்!**

## ஹார்முஸ் ஜலசந்தி விவகாரம்: ஓமனுக்கு டிரம்ப் எச்சரிக்கை!

ஈரான், மே. 29–

ஹார்முஸ் ஜலசந்தியை ஓமனுடன் சேர்ந்து கூட்டாக நிர்வகிக்க இருப்பதாக ஈரான் முன்மொழிந்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகின.



இதுபற்றி வெள்ளை மாளி கையில் செய்தியாளர்களிடம் பேசிய அதிபர் டிரம்ப், சர்வதேச சட்டத்தின்படி ஹார்முஸ் ஜலசந்தியை யாரும் கட்டுப்படுத்த முடி யாது. ஹார்முஸ் ஜலசந்தியை நிர்வகிப்பது குறித்த ஈரானின் முன்மொழிவை நிராகரிக்கிறேன். ஓமனும் மற்றவர்களை ப்போலவே நடந்துகொள்ளும். இல்லையென்றால், நாம் அவர்களைத் தகர்க்க வேண்டியிருக்கும்'' என எச்சரித்துள்ளார்.

மத்திய கிழக்கில் அமெரி க்காவின் மிக நெருங்கிய நட்பு நாடாக இருந்துவரும் ஓமன், அமெரிக்க இராணுவ ஒத்துழைப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இத்தகைய சூழலில் தனது நட்பு நாட்டிற்கே டிரம்ப் எச்சரிக்கை விடுத்து இருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நதிநீர் பிரச்னைகளுக்கு தீர்வு காண மாநிலங்களுக்கு பிரதமர் அறிவுறுத்தல்!

புதுடில்லி, மே. 29–



மத்திய – மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு திட்டங்களை ஆய்வு செய்யும் 51வது, 'பிரகதி' ஆலோசனை கூட்டம், பிரதமர் மோடி தலைமையில் நேற்று முன்தினம் மாலை நடந்தது.

ரயில்வே, மின்சாரம் மற்றும் சாலை வசதிகள் துறைகளின் கீழ், 30,000 கோடி ரூபாய் மதிப்பில் ஒன்பது மாநிலங்களில் செயல்படுத்தப்படவுள்ள ஏழு முக்கிய திட்டங்கள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அப்போது பிரதமர் மோடி கூறியதாவது:

மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் பங்கீட்டு பிரச்னைகளுக்கு ஒத்துழைப்பு, உரிய காலத்தில் ஒப்புதல், தொழில்நுட்ப ரீதியில் கண்காணிப்பு மற்றும் இயக்கம் சார்ந்த செயல்பாடு ஆகியவை தீர்வு தருவதாக அமையும்.

இதற்கு மத்திய பிரதேசம் மற்றும் உத்தர பிரதேசம் இடையே செயல்படுத்தப்படும், 'கென் – பெத்வா' திட்டம் சிறந்த முன்னுதாரணம்.

'கென் – பெத்வா' நதிநீர் இணைப்பு திட்டத்தின் பாணியில், பிற மாநிலங்களும் நதிநீர் இணைப்பு, நீர் சேமிப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டல் மற்றும் திறன் வாய்ந்த நீர்பாசன முறைகளை ஒருங்கிணைந்து செயல்படுத்தி, நீண்டகால நீர் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

மக்கள் நல திட்டங்களில் ஏற்படும் காலதாமதம், அந்த திட்டத்திற்கான செலவை அதிகரிப்பதுடன், மக்களுக்கு கிடைக்க வேண்டிய அத்தியாவசிய சேவைகளையும் தாமதப்படுத்தி தடுத்து விடுகிறது.

எனவே, மத்திய அமைச்சகங்களும், மாநில அரசுகளும் தேங்கி கிடக்கும் கோப்புகளுக்கு உடனடியாக ஒப்புதல் வழங்கி, முக்கிய திட்டங்களை நிறைவேற்ற ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஜூன் 1 முதல் அமலுக்கு வரும் 7 மாற்றங்கள்?

புதுடெல்லி, மே. 29–

ஒவ்வொரு மாதத்தின் தொடக்கத்திலும் புதிய விதிகள் அமலுக்கு வரும். அந்த வகையில் வருகின்ற ஜூன் 1–ஆம் தேதியும் ஒரு சில மாற்றங்கள் வரவுள்ளன. முன்கூட்டியே இதை நாம் தெரிந்து வைத்துக் கொண்டால் தேவையற்ற செலவுகளையும், கடைசி நேரத் தலைவலியையும் வெகுவாக தவிர்க்கலாம். அப்படி இந்த மாத தொடக்கத்தில் இருந்து என்னென்ன மாற்றங்கள் வரப்போகிறது?




**1.UPI:**

ஆன்லைன் மோசடி அதிகரித்திருப்பது அனைவரும் அறிந்ததுதான். எனவே பண மோசடிகளை தவிர்ப்பதற்காக என்பிசிஐ ஒரு புதிய முறையை செயல்படுத்தத் தயாராகி வருகிறது. நீங்கள் ஒருவருக்கு QR கோடை ஸ்கேன் செய்து பணம் அனுப்பும்போதோ அல்லது அவர்களுடைய மொபைல் எண்ணுக்கு பணம் அனுப்பும்போதோ அவர்களுடைய வங்கி கணக்கில் என்ன பெயர் இருக்கிறதோ? அந்த பெயர் காண்பிக்கப்படும். இதன் மூலம் நீங்கள் தவறான நபருக்கு பணம் அனுப்புவது முற்றிலும் தவிர்க்கப்படும்.

இதற்கு முன்னர் அவர்களுடைய செல்லப் பெயர் திரையில் காண்பிக்கப்பட்டது. ஆனால் தொடர் மோசடிகளைக் கருத்தில் கொண்டு வங்கிக் கணக்கின் பெயரே இனி காண்பிக்கப்படும்.

**2.எல்பிஜி சிலிண்டர் விலை:**

ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் OMC நிறுவனங்கள் சிலிண்டர் விலைகளில் சில திருத்தங்களைச் செய்யும். அந்த வகையில் ஜூன் 1–ஆம் தேதி அன்றும் அறிவிப்பு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த மாதமே கமர்சியல் சிலிண்டர் கமர்சியல் சிலிண்டர் விலை 993 ரூபாய் உயர்ந்து ஹோட்டல் உரிமையாளர்களுக்கு அதிர்ச்சி தந்தது. இதனால் ஒரு கமர்சியல் சிலிண்டரின் விலை ரூ.3,000–த்தைக் கடந்தது. ஆனால் 14.2 கிலோ எடையுள்ள வீட்டு உபயோக சிலிண்டரின் விலையில் எந்த மாற்றமும் இல்லை. இதனால் இல்லத்தரசிகளுக்கு ஓரளவு நிவாரணம் கிடைத்தது. இந்த மாதமும் கமர்சியல் சிலிண்டர் மற்றும் வீட்டு உபயோக சிலிண்டர் விலையில் மாற்றம் இருக்குமா என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

**3.ரயில் பயணம்:**

வருகின்ற ஜூன் மாதத்தில் இந்திய ரயில்வே தண்டவாள பராமரிப்பு பணியில் ஈடுபட இருக்கிறது. இதனால் சுமார் 77 இந்திய ரயில்கள் வரை ரத்து செய்ய வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. ஒரு சில ரயில் வழித்தடங்களில் பிரச்சனை இருப்பதால் அந்த வழித்தடங்கள் மாற்றப்படவும் வாய்ப்புள்ளது. மேலும் மகாராஷ்டிரா, குஜராத், மத்திய பிரதேஷ், சத்தீஸ்கர், மேற்கு வங்கம், ஜார்கண்ட், ஒடிசா போன்ற மாநிலங்களில் இந்த தாக்கம் அதிகமாக இருக்கும். தமிழகத்திலிருந்து இந்த மாநிலங்களுக்கு ஜூன் மாதத்தில் பயணம் செய்ய திட்டமிட்டிருந்தால் ரயில் கிளம்பும் லைவ் ஸ்டேட்டஸ்–ஐ சரி பார்த்துக் கொள்வது நல்லது.

**4.பான் கார்டு மாற்றம்:**

வருமான வரித்துறை பான் கார்டு விதிகளில் சில தளர்வுகளையும் அதே நேரத்தில் சில கட்டுப்பாடுகளையும் கொண்டு வந்துள்ளது. நீங்கள் ரூ.50,000–த்துக்கும் மேல் வங்கியில் கேஷ் டெபாசிட் செய்தால் இனி பான் கார்டு வழங்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அதே போல சொத்து பரிவர்த்தனைக்காக பான் கார்டை பயன்படுத்தும் போது இதற்கு முன்னர் ரூ.10 லட்சம் வரையில் பரிவர்த்தனை செய்யலாம். ஆனால் தற்போது இந்த வரம்பு ரூ.20 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ரூ.45 லட்சத்திற்கும் மேற்பட்ட சொத்து பரிவர்த்தனை செய்யும் போது, கண்டிப்பாக பான் கார்டு வழங்க வேண்டும். பான் கார்டு இல்லாத தனிநபர்கள் இதற்கு முன்பு ஃபார்ம் 60 பயன்படுத்தி வந்தனர். தற்போது அரசு ஃபார்ம் 97–ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

**5.சோலார் பேனல்கள்:**

இன்றைய எலக்ட்ரிசிட்டி பில்லைக் கருத்தில் கொண்டு பல வீடுகளில் சோலார் பேனல்கள் அமைக்கப்பட்டு வருகிறது. அரசு புதிய "Approved List of Models and Manufacturers" என்ற விதியை ஜூன் 1 முதல் அமலுக்கு கொண்டு வரவுள்ளது. இனிமேல் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சோலார் மாடல்களை பயன்படுத்தினால் மட்டும்தான் அதற்கு மானியம் வழங்கப்படும். தரம் குறைந்த அல்லது அங்கீகரிக்கப்படாத சோலார் பேனல்களுக்கு இந்த சலுகைகள் கிடைக்காது.

**6.ஏடிஎம் கட்டணங்கள்:**

சில வங்கிகள் தற்போது பிக்சட் டெபாசிட் வட்டி விகிதங்களை மாற்றியமைத்து வருகின்றன. அதோடு சில வங்கிகள் தங்களுடைய ஏடிஎம் பரிவர்த்தனை விதிகளில் மாற்றங்களை அறிவித்திருக்கிறது. பஞ்சாப் நேஷனல் பேங்க் சில டெபிட் கார்டுகளுக்கு மட்டும் பண பரிவர்த்தனை வரம்பை குறைத்துள்ளது. ஜூன் மாதத்தில் நடக்கவிருக்கும் ரிசர்வ் வங்கியின் கொள்கை முடிவுகளைப் பொறுத்தே வங்கிகள் ஏடிஎம் சேவை கட்டணங்களை மாற்ற வாய்ப்புள்ளது.

**7. ஆர்பிஐ பணவியல் கொள்கை கூட்டம்:**

பணவியல் கொள்கை கூட்டம் வருகின்ற ஜூன் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்தியாவின் பணவீக்கம் மற்றும் பொருளாதாரத்தை பொறுத்து வட்டி விகிதங்களில் மாற்றம் செய்யப்படும். ரெப்போ விகிதம் குறைந்தால் உங்களுடைய வீட்டுக் கடன் இஎம்ஐ–யும் குறையும். அதுவே அதிகரித்தால் நீங்கள் அதிக வட்டி செலுத்த வேண்டிய நிலை வரலாம்.

# அமைதி திரும்புமா?

# ஈரான்-அமெரிக்கா போர் மேலும் 2 மாதங்கள் நிறுத்தம்?

## புதிய தற்காலிக ஒப்பந்தம்!!






வாஷிங்டன், மே 29–

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே நீடித்து வரும் மோதலை தற்காலிகமாக நிறுத்தும் வகையில், தற்போதைய போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேலும் 60 நாட்கள் (இரண்டு மாதங்கள்) நீட்டிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) எட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இருப்பினும், இந்த ஒப்பந்தம் இன்னும் இறுதி அங்கீகாரத்தை பெறவில்லை. குறிப்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் ஒப்புதல் கிடைத்த பின்னரே அது அமலுக்கு வரும் என கூறப்படுகிறது.

\இஸ்லாமியக் குடியரசுக்கு எதிரான அமெரிக்கத் தாக்குதலைத் தொடர்ந்து குவைத் ஒரு தாக்குதலை நடத்தியதாக அறிவித்ததை அடுத்து, ஈரான் போர் நிறுத்தத்தை மீறிவிட்டதாக அமெரிக்க இராணுவம் குற்றம் சாட்டியது. இதற்கிடையில், ஈரானிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணைகளை குவைத் இடைமறித்ததாக அமெரிக்க மத்திய கட்டளை மையம் தெரிவித்ததுடன், பாரசீக வளைகுடாவில் அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடுகளில் ஒன்றின் மீதான இந்தத் தாக்குதலை "ஒரு பெரிய போர் நிறுத்த மீறல்'' என இராணுவ அதிகாரிகள் வர்ணித்தனர்.

60 நாள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல் போக்குவரத்து "தடையின்றி'' நடைபெறும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். இதன் பொருள், சுங்கக் கட்டணங்களோ அல்லது இடையூறுகளோ இருக்காது என்பதும், 30 நாட்களுக்குள் ஜலசந்தியில் உள்ள அனைத்து கண்ணிவெடிகளையும் ஈரான் அகற்ற வேண்டும் என்பதும் ஆகும்.

அமெரிக்கக் கடற்படை முற்றுகையும் நீக்கப்படும், ஆனால் இது வர்த்தகக் கப்பல் போக்குவரத்து மீண்டும் தொடங்குவதைப் பொறுத்து அமையும் என்று அமெரிக்க அதிகாரி தெரிவித்தார். ஈரான் எண்ணெயை இன்னும் எளிதாக விற்பனை செய்ய அனுமதிக்கும் வகையில், அமெரிக்கா சில தடைகளையும் தளர்த்தும். அணு ஆயுதங்களை உருவாக்க மாட்டோம் என்ற ஈரானின் உறுதிமொழி இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடம்பெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், 60 நாள் காலக்கட்டத்தில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளுக்கான முக்கிய விடயங்களாக, ஈரானின் அதிக செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை எவ்வாறு அகற்றுவது மற்றும் ஈரானின் செறிவூட்டலை எவ்வாறு கையாள்வது என்பனவும் குறிப்பிடப்படும்.

பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாக, தடைகளைத் தளர்த்துவது மற்றும் முடக்கப்பட்ட ஈரானிய நிதிகளை விடுவிப்பது குறித்து விவாதிக்க அமெரிக்கா உறுதியளிக்கும். ஈரானுக்குப் பொருட்கள் மற்றும் மனிதாபிமான உதவிகள் சென்றடைவதை எளிதாக்குவதற்கான வழிகள் குறித்தும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் விவாதிக்கும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், லெபனானில் இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே நடக்கும் போரையும் முடிவுக்குக் கொண்டுவரும். பேச்சுவார்த்தைகளின் போது அணுசக்தி விவகாரத்தில் ஈரான் நடவடிக்கை எடுக்க இயலாது என்பது தெளிவாகத் தெரிந்தால், டிரம்புக்குப் பொருளாதார மற்றும் இராணுவ ரீதியான அனைத்து வழிகளும் இருக்கும் என்று அதிகாரிகள் கூறினர். பிராந்தியத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுவது இறுதி ஒப்பந்தத்தைப் பொறுத்தது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.ஒப்பந்தத்தின் பெரும்பாலான நிபந்தனைகள் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும், ஆனால் இரு தரப்பினருக்கும் மூத்த தலைவர்களின் ஒப்புதல் இன்னும் தேவைப்படுவதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். பின்னர் ஈரானியர்கள் திரும்பி வந்து, தங்களிடம் தேவையான ஒப்புதல்கள் இருப்பதாகவும், கையெழுத்திடத் தயாராக இருப்பதாகவும் கூறியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இருப்பினும், ஈரான் இதை உறுதிப்படுத்தவில்லை.

அமெரிக்கப் பேச்சுவார்த்தையாளர்கள் இறுதி ஒப்பந்தத்தின் விவரங்கள் குறித்து டிரம்புக்கு விளக்கினர், ஆனால் அவர் உடனடியாகக் கையெழுத்திடவில்லை. "இது குறித்துச் சிந்திப்பதற்குச் சில நாட்கள் தேவை என்று அதிபர் மத்தியஸ்தர்களிடம் கூறினார்,'' என ஓர் அமெரிக்க அதிகாரி தெரிவித்தார

உலக நாடுகள் இந்த முயற்சியை வரவேற்றுள்ளன. ஏனெனில், நீடித்த அமைதி ஒப்பந்தத்திற்கான முக்கியமான படியாக இந்த இரண்டு மாத போர் நிறுத்த நீட்டிப்பு கருதப்படுகிறது.

அதே நேரத்தில், இறுதி உடன்பாடு எட்டப்படுமா என்பது குறித்து சர்வதேச சமூகத்தின் கவனம் தற்போது திரும்பியுள்ளது.

## நீட் மறுதேர்வு; விமானப் படை உதவியை பெற மத்திய அரசு திட்டம்!

புதுடெல்லி, மே. 29–

நீட்–யு.ஜி (NEET–UG) தேர்வுக்கான தேர்வுப் பொருட்களைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்வது உள்ளிட்ட தளவாட உதவிகளை இந்திய விமானப் படையிடமிருந்து பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அரசாங்கம் விவாதித்து வருவதாகத் தெரிய வந்துள்ளது.




வியாழக்கிழமை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் விமானப்படை உதவி மற்றும் பிற சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், தகவல் தொடர்பு அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, தேசிய தேர்வு முகமையின் தலைமை இயக்குநர் அபிஷேக் சிங், பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மற்றும் அஞ்சல் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வேறு அகில இந்திய அளவிலான தேர்வுகளுக்கும் இந்திய விமானப்படை தளவாட உதவிகளை வழங்குமா என்பது உடனடியாகத் தெரியவில்லை.

இந்த முன்னேற்றங்கள் குறித்து அறிந்த வட்டாரங்கள், இந்த முறை நீட்–யு.ஜி மறுதேர்வை நடத்துவதற்கு தேசிய தேர்வு முகமை (NTA) ஒரு "நெருக்கமான கால அட்டவணையில்'' செயல்பட்டு வருவதாகவும், "அரசாங்கம் முழுமையாக'' இயங்கி வருவதாகவும் தெரிவித்தன.

நீட்–யு.ஜி (NEET–UG) தேர்வுக்கான தயாரிப்புப் பணிகள் பொதுவாக சுமார் ஆறு மாதங்கள் நீடிக்கும் நிலையில், தேர்வு முகமை தற்போது மறுதேர்வுக்காக 38 நாட்களில் முழு ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும், இது தேர்வு முகமைக்கு 'கடுமையான கால நெருக்கடியை' ஏற்படுத்தியுள்ளதாகவும் வட்டாரங்கள் தெரிவித்தன.

22 லட்சத்திற்கும் மேற்பட்ட தேர்வர்களுக்காக மே 3 அன்று நடத்தப்பட்ட நீட் தேர்வு, வினாத்தாள் கசிந்ததாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து மே 12 அன்று ரத்து செய்யப்பட்டது. மே 15 அன்று, மறுதேர்வு ஜூன் 21 அன்று நடத்தப்படும் என்று தேசிய தேர்வு முகமை (NTA) அறிவித்தது. தற்போது, இந்த வினாத்தாள் கசிவு குறித்து சி.பி.ஐ விசாரித்து வருகிறது.

# தலையங்கம் — மதுரை மணி

**வெள்ளிக்கிழமை 29.05.2026**
**விசுவாவசு தமிழ் வருடம்**
**வைகாசி மாதம் 15-ம் தேதி**

## கைமீறி போகும் நிலைமை: விமான பயணிகளே எச்சரிக்கை!!




ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்து அனைவரையும் வாட்டி வதைக்கிறது. பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வு அனைத்து பொருட்களின் விலைவாசி உயர்வுக்கும் வித்திட்டுள்ளது. இதனால் விமான எரிபொருட்களின் விலையும் கிடு கிடுவென உயர்ந்துள்ளது. எரிபொருள் விலை உயர்வால் விமானங்களை இயக்க அதிக செலவு ஏற்படுவதாக கூறி இருக்கும் ஏர் இந்தியா நிறுவனம் தனது உள்நாட்டு விமான சேவைகளை 22 சதவீதம் வரை குறைக்க இருப்பதாக அறிவித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருள் விலை உயர்வை முழுமையாக பயணிகள் மீது சுமத்த முடியாத சூழலில் விமான சேவை நிறுவனங்கள் நாளுக்கு நாள் செலவு உயர்கிறது நிலைமை கைமீறி போகிறது என தெரிவிக்கின்றன. ஏற்கனவே ஏர் இந்தியா நிறுவனம், தனது சர்வதேச விமான சேவையை 27 சதவீதம் குறைத்துள்ள நிலையில் உள்நாட்டு விமான சேவையையும் குறைக்க உள்ளது. ஏர் இந்தியா ஒரு வாரத்திற்கு சுமார் 4,400 விமானங்களை இயக்கும் நிலையில், இதில் சுமார் 3,600 விமானங்கள் உள்நாட்டிலும், மீதமுள்ள 800 விமானங்கள் சர்வதேச அளவிலும் இயக்கப்படுகின்றன.

இந்நிலையில் ஜூன் முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில், சர்வதேச சேவையில், ஏற்கனவே அறிவித்திருந்த மாற்றங்களின் தொடர்ச்சியாக, அதே காலகட்டத்தில் சில உள்நாட்டு வழித்தடங்களிலும் எங்கள் செயல்பாடுகளை தற்காலிகமாக சீரமைத்துள்ளோம் என ஏர் இந்தியா தெரிவித்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, குறிப்பிட்ட சில வழித்தடங்களில் விமான சேவைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாக ஏர் இந்தியா கூறுகிறது. உள்நாட்டு விமான சேவை 20 முதல் 22 சதவீதம் வரை குறைக்கப்படும் என்றும், எரிபொருள் விலை கட்டுக்கடங்காமல் உயர்வதே இந்த முடிவுக்கு காரணம் என்றும் தெரிவித்துள்ளது. இந்த மாற்றங்களால் பாதிக்கப்படும் பயணிகளுக்கு, மாற்று விமானங்களில் இடம், கட்டணமின்றிப் பயணத் தேதியை மாற்றிக்கொள்ள அனுமதி அல்லது சூழலுக்கு ஏற்ப முழுப் பயண கட்டணத்தையும் திரும்ப வழங்குவது என்பன உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவித்துள்ளது.

இதன்படி பார்த்தால் சுமார் 800 விமான சேவைகளை ஏர் இந்தியா நிறுத்துகிறது. திடீரென விமான சேவையில் 800 விமான சேவைகள் குறைப்பு என்பது உல்நாட்டு விமான போக்குவரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். கடந்த மார்ச் மாதத்துடன் முடிந்த நிதி ஆண்டில் ஏர் இந்தியா நிறுவனம் ஏற்கனவே 26,700 கோடி ரூபாய் நஷ்டம் அடைந்திருப்பதாக தெரிவித்திருந்தது. நஷ்டத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு ஈரான் போர் காரணமாக ஏற்பட்ட விமான எரிபொருள் விலை உயர்வு மிகப்பெரிய தலைவலியாக வந்து அமைந்திருக்கிறது.

## அதிரடியாக உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, மே. 29–

தங்கம் விலை குறையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அதிரடியாக உயர்ந்துள்ளது. தங்கம் கிராமுக்கு 100 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,600–க்கும் சவரனுக்கு 800 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 800 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

தங்கம் விலையை போல வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. கிராமுக்கு ரூ.5–ம், கிலோவுக்கு ரூ.5 ஆயிரமும் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.290–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 90 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.




மதுரை சமூக ஆர்வலர் வைகை ராஜன் அவர்களின் பிறந்தநாளில் அவருக்கு இல. அமுதன், ஆசிரியர் முரளி,கவிக்குயில் கணேசன்,சந்தோஷ்சுதன், ராமன், ராமசுப்பு மணியன், கனகமஹால் கார்த்திகேயன், தியாகதீபம் பாலு,மற்றும் முன்னாள் இரணுவவீரர் சண்முகசுந்தரம் ஆகியோர் சிறப்பித்தனர்.

## பத்திரப்பதிவுக்கு கூடுதல் முன்பதிவு டோக்கன்கள்!



சென்னை, மே. 29–

தமிழக அரசின் பதிவுத்துறை தலைவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் (டோக்கன்) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தற்போது வைகாசி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினமான மே. 29 (வெள்ளிக்கிழமை) அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு டோக்கன்கள் ஒதுக் கீடு செய்யுமாறு பல்வேறு தரப்பு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. அதன்படி இன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100–க்கு பதிலாக 150 முன்பதிவு டோக்கன்களும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200–க்கு பதிலாக 300 முன்பதிவு டோக்கன்களும், அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100–க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு டோக்கன்களுடன் ஏற்கெனவே வழங்கப் படும் 12 தட்கல் முன்பதிவு டோக்கன்களும், கூடுதலாக 4 தட்கல் முன்ப திவு டோக்கன்களும் பொது மக்களின் பயன்பாட்டுக்காக வழங்கிட உத்தரவி டப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## அறநிலையத்துறை அமைச்சரிடம் ரூ.4000 லஞ்சம் வசூலித்த அர்ச்சகர்: திருச்செந்தூரில் அதிர்ச்சி!





திருச்செந்தூர், மே. 29–

திருச்செந்தூர் கோவிலில் சுவாமி தரிசனத்திற்காக அமைச்சர் ரமேஷ் மற்றும் அவரது உதவியாளரிடம் ரூ.4 ஆயிரம் பெற்ற அர்ச்சகர், அவர்களின் உண்மையான அடையாளம் தெரிந்ததும் அதிர்ச்சி அடைந்தார்.

தமிழக ஹிந்து அறநிலை யத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள ரமேஷ் பல்வேறு கோவில்களுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார். சில தினங்களுக்கு முன் திருச்சி கோவிலில் ஆய்வு செய்த பிரசாதங்களில் காலாவதி தேதி குறிப்பிட வில்லை என்பதை கண்டறிந்தார். தமிழகம் முழுவதும் உள்ள கோவில் பிரசாதங்க ளில் காலாவதி தேதி கட்டா யம் என்ற உத்தரவை பிறப்பித்தார். அந்தவகையில் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் இன்று ஆய்விற்காக சென்றுள்ளார். அவர் அமைச்சர் பொறுப்பு வகிப்பது தெரியாத வகையில் தனது உதவியாளருடன் சாதாரண மனிதர் போல் சென்று இருக்கிறார். கோவில் வளாகத்தை சுற்றி வந்து சுற்றிப்பார்த்துள்ளார். அப்போது கோவிலில் சுவாமி தரிசனம் செய்வதற்கு கட்டணம் எவ்வளவு? என அங்கு இருந்த அர்ச்சகர்களிடம் அமைச்சர் ரமேஷ், அவரது உதவியாளர் கேட்டு இருக்கின்றனர். இதற்கு அர்ச்சகர் ஒரு ஆளுக்கு 2 ஆயிரம் ரூபாய், இரண்டு பேருக்கு 4 ஆயிரம் ரூபாய் தாருங்கள் என்று கேட்டு இருக்கிறார். அந்த அர்ச்சகரிடம் அமைச்சர் உதவியாளர் பணம் இல்லை, ஜிபேயில் தான் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார். உடனே அர்ச்சகர் தனது ஜிபே நம்பரை சொல்லி ரூ.4 ஆயிரம் பணத்தை பெற்றுக்கொண்டார்.

பிறகு அமைச்சர் ரமேஷ் மற்றும் அவரது உதவியாளரிடம் ரூ.4 ஆயிரம் பெற்ற அர்ச்சகர், அவர்களின் உண்மையான அடையாளம் தெரிந்ததும் அதிர்ச்சி அடைந்தார். இதனை தொடர்ந்து அன்னதான கூடத்தில் அமைச்சர் ரமேஷ் ஆய்வு செய்தபோது, அதிகாரிகளிடம் அர்ச்சகர்கள் தரிசனத்திற்கு பணம் வாங்குவது குறித்து கடும் கோபத்துடன் கேள்விகளை எழுப்பி உள்ளார். தொடர்ந்து முடி காணிக்கை செலுத்தும் இடம் உள்ளிட்ட கோவில் வளாகத்தில் அமைச்சர் ரமேஷ் ஆய்வு மேற்கொண்டார்.



உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் திருப்பூர் மாநகர் மாவட்டம் நெருப்பெரிச்சல் பகுதி கழகம் சார்பில் வார்டு எண் 4,5,8, ஆகிய வார்டுகளில் அன்னதானம் வழங்கும் விழா பகுதி செயலாளர் கோவிந்தராஜ் ஏற்பாட்டில் பொருளாளர் வெள்ளைச்சாமி தலைமையில் வழங்கப்பட்டது இதில் வட்டக் கழக செயலாளர்கள் சந்திரசேகர். கல்யாணசுந்தரம். ஜோதிவேல். மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் பங்கேற்றனர்.

## சினிமா துளிகள்..!

### நெட்ஃப்ளிக்ஸில் வெளியானது நடிகர் தனுஷின் ‘கர’ திரைப்படம்!




நடிகர் தனுஷ் நடிப்பில் க்ரைம் த்ரில்லர் படமாக கடந்த மாதம் ஏப்ரல் 30 அன்று ‘கர’ திரைப்படம் திரையரங்குகளில் வெளியானது.

விக்னேஷ் ராஜா இயக்கியுள்ள இத்திரைப்படத்திற்கு, ஆல்ஃப்ரட் ராஜா திரைக்கதை எழுதியுள்ளார். இப்படத்தை ஐசரி கணேஷ் தயாரித்துள்ளார். தேனி ஈஸ்வர் இப்படத்திற்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ள இப்படத்தில், மமிதா பைஜூ கதாநாயகியாக நடித்துள்ளார். கே.எஸ்.ரவிக்குமார், சூரஜ் வெஞ்சரமூடு மற்றும் ஸ்ரீஜா ரவி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். 1990–களில் வாழும் கரசாமி என்ற கதாபாத்திரத்தில் நடித்த தனுஷை சுற்றி கதை சுழல்கிறது. ‘கிராமத்தில் வாழும் ஒருவன், ஜப்தி செய்யப்பட்ட தனது நிலத்தை மீட்பதற்கு என்ன செய்கிறான்’ என்பதை கருவாக கொண்டு படம் நகர்கிறது.

கடந்த மாதம் வெளியான இத்திரைப்படம் ரூ.50 கோடிக்கும் மேல் வசூல் சாதனை புரிந்துள்ளது. இந்த நிலையில் தற்போது நெட்ஃப்ளிக்ஸ் ஓடிடி தளத்தில் கர திரைப்படம் இன்று (மே 28) வெளியானது. தமிழ், ஹிந்தி, தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் ஆன்லைனில் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 4 மாநிலங்களுக்கு பா.ஜ.வின் புதிய தலைவர்கள் நியமனம்!



புதுடெல்லி, மே. 29–

டெல்லி, பஞ்சாப், திரிபுரா மற்றும் அரியானா மாநிலங்களுக்கு பா.ஜனதாவின் புதிய தலைவர்கள் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். கட்சியின் தேசிய தலைவர் நிதின் நபின் இந்த நியமனங்களை செய்துள்ளார். அதன் படி டெல்லிக்கு மத்திய மந்திரி ஹர்ஷ் மல்கோத்ரா புதிய தலைவராகி இருக்கிறார். அரியானாவுக்கு அர்ச்சனா குப்தா, பஞ்சாப்புக்கு சர்தார் கேவல் சிங் தில்லான் ஆகியோர் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

திரிபுராவுக்கு அபிஷேக் தெப்ராய் என்ற எம்.எல்.ஏ. பா.ஜனதா தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளார். இந்த நியமனங்கள் உடனடியாக அமலுக்கு வருவதாக கட் சியின் தேசிய பொதுச்செயலாளர் அருண் சிங் அறிவித்து உள்ளார்.

## மேகதாது அணை விவகாரம்: தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு!




சென்னை, மே. 29–

காவிரியின் குறுக்கே மேகதாது எனுமிடத்தில் தடுப்பணையை கட்டியே தீருவோம் என்று கர்நாடகா அரசு முனைப்பு காட்டி வருகிறது. இந்த அணைக் கட்டப்பட்டால், காவிரி நீரை நம்பியிருக்கும் தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் என்பதால், இந்தத் திட்டத்தை தமிழக அரசு தொடர்ந்து எதிர்த்து வருகிறது. (மே 28ந்தேதி) மேகதாது அணைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக அரசின் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த மனுவில், காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் கர்நாடக அரசின் முடிவு சட்டவிரோதம் என்று அறிவித்து திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். அணைக்கான பூமி பூஜை உள்ளிட்ட எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது என தெரிவித்துள்ளது.



## திருமண தடைகள் நீங்க பரிகாரங்கள்?




திருமணத் தடைகள் நீங்க பொதுவாக மக்கள் நம்பிக்கையில் செய்யப்படும் சில பரிகாரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவை ஆன்மிக நம்பிக்கையை அடிப்படையாக கொண்டவை:

**திருமணத் தடைகள் நீங்க பரிகாரங்கள்**

1. ஸ்ரீ முருகன் வழிபாடு

செவ்வாய் மற்றும் கிருத்திகை நாள்களில் முருகன் கோவிலுக்கு செல்லவும்.

“ஓம் சரவணபவா” மந்திரத்தை தினமும் 108 முறை சொல்லலாம்.

சிவப்பு மலர், பால் அபிஷேகம் செய்வது நல்லதாக கருதப்படுகிறது.

2. ஸ்ரீ துர்கை அம்மன் பூஜை

வெள்ளிக்கிழமைகளில் எலுமிச்சை தீபம் ஏற்றுவது வழக்கம்.

ராகு–கேது தோஷம் உள்ளவர்கள் துர்கை அம்மனை வழிபடுவர்.

3. ஸ்ரீ பர்வதி தேவி பரமசிவன் அர்ச்சனை

திங்கட்கிழமைகளில் சிவன் கோவிலில் அர்ச்சனை செய்யலாம்.

“உமாமகேஸ்வர பூஜை” திருமண யோகம் விரைவில் அமையும் என நம்பப்படுகிறது.

4. நவகிரக பரிகாரம்

ஜாதகத்தில் செவ்வாய் தோஷம், ராகு–கேது தோஷம் இருந்தால் நவகிரக சாந்தி செய்யலாம்.

குறிப்பாக செவ்வாய்க்கிழமை விரதம் இருப்பதும் வழக்கம்.

5. திருமண யோகம் தரும் கோவில்கள் தரிசனம்

பொதுவாக மக்கள் செல்லும் சில கோவில்கள்:

திருமணஞ்சேரி கோவில்

திருவிடந்தை நித்ய கல்யாண பெருமாள் கோவில்

காளஹஸ்தி கோவில்

6. தானம் மற்றும் நல்ல செயல்

ஏழை பெண்களுக்கு உடை தானம்

திருமணத்திற்கு உதவி செய்தல்

அன்னதானம் செய்வது

7. வீட்டில் செய்யக்கூடிய எளிய வழிமுறைகள்

வெள்ளிக்கிழமை வீட்டில் தீபம் ஏற்றி லட்சுமி அஷ்டோத்திரம் சொல்லலாம்.

பூஜை அறையை சுத்தமாக வைத்திருக்கவும்.

எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து நம்பிக்கையுடன் இருக்கவும்.

திருமணத் தடைகள் ஜாதகம், குடும்ப சூழ்நிலை, மனநிலை, சமூக காரணங்கள் போன்ற பல விஷயங்களால் ஏற்படலாம். ஆன்மிக பரிகாரங்களுடன் நடைமுறை முயற்சிகளையும் சேர்த்து செய்வது முக்கியம்.



தேனி மாவட்டம் தேனி–அல்லிநகரம் நகராட்சி அம்மா உணவகத்தில் மாவட்ட ஆட்சியர் ரஞ்சித்சிங் பொதுமக்களுடன் உணவு அருந்தி ஆய்வு மேற்கொண்டார்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் ATC டிப்போ மற்றும் பழைய பேருந்து நிலையம் அருகே தவெக கட்சியின் வணிகவரித்துறை மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் D.லோகேஷ் தமிழ்ச்செல்வன் வருகை தந்தார். அவரை வரவேற்கும் வகையில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கூடினர்.தொடர்ந்து அமைச்சருக்கு பொன்னாடை அணிவித்தும், மாலை உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# மீண்டும் டெல்லி செல்லும் முதல்வர் விஜய்?

டெல்லி, மே. 29–

தமிழ்நாடு முதல்வர் விஜய் ஜூன் 11ந்தேதி மீண்டும் டெல்லி செல்ல உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

டெல்லியில் நடைபெற உள்ள நிதிஆயோக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடிவு செய்துள்ளதாகவும், இந்த பயணத்தின்போது, காங்கிரஸ் தலைவர்கள் உள்பட பலரை சந்திக்க திட்டமிட்டு உள்ளதாக கூறப்படுகிறது.இதனிடையே, காங்., தரவு பகுப்பாய்வு பிரிவு தேசிய




தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி சென்னையில் அளித்த பேட்டியில், ”மே 28ந்தேதிஅன்று மாலை 6:00 மணிக்கு மேல், ராகுலுக்கு நேரமில்லை; இதனால், முதல்வர் விஜயுடனான சந்திப்பு நடக்கவில்லை. அடுத்த முறை முதல்வர் டில்லி செல்லும்போது, நிச்சயம் ராகுலை சந்திப்பார்,” என்றார். டில்லியில், வரும் ஜூன் 11ல், 'நிதி ஆயோக்' கூட்டம் நடக்க உள்ளது. இதில் பங்கேற்க, அனைத்து மாநில முதல்வர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு ள்ளது. பிரதமர் மோடி தலைமையிலான இந்தக் கூட்டத்தில் தமிழக முதல்வர் விஜய், பங்கேற்க விரும்புகிறார். எனவே, அவர் மீண்டும் டில்லி செல்ல உள்ளார். அப்போது, காங்., தலைவர்களை சந்திப்பார் என கூறப்படுகிறது.

# கியூட் தேர்வுக்கான புதிய தேதிகள்!

சென்னை, மே. 29–

மத்திய பல்கலைக்கழகங்கள் சார்பில் வழங்கப்படும் இளநிலை கலை–அறிவியல் பட்டப் படிப்புகளில் சேர்க்கை பெறுவதற்கான 'பொதுப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு 2026 (க்யூட்)' தேர்வுக்கான புதிய தேதியை தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) வியாழக்கிழமை அறிவித்தது..

அதன்படி, கியூட் தேர்வு வரும் மே 31, ஜூன் 6, 7 ஆகிய தேதிகளில் நடத்தப்பட உள்ளது..




முன்னதாக, இந்ததேர்வு மே 28ந்தேதி நடைபெற இருந்த நிலையில், பக்ரீத் பண்டிகை காரணமாக மாற்றிவைக்கப்பட்டது. இதையடுத்த புதிய தேதிகள் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, வரும் மே 31–ஆம்தேதிநடைபெறவிருக்கும் கியூட் தேர்வில் பங்கேற்கும் தேர்வர்களுக்கான தேர்வறை நுழைவுச் சீட்டு தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

cuet.nta.nic.in/ என்ற அதிகாரபூர்வ வலைதளத்திலிருந்து தேர்வறை நுழைவுச் சீட்டை தேர்வர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்..ஜூன் 6, 7–ஆம் தேதிகளில் நடைபெறும் க்யூட் தேர்வில் பங்கேற்பவர்களுக்கான தேர்வறை நுழைவுச் சீட்டு விரைவில் வெளியிடப்படும் என்று என்டிஏ தெரிவித்துள்ளது.

# தமிழகத்தின் புதிய டி.ஜி.பி. யார்? - வெளியாகிறது அறிவிப்பு!

சென்னை, மே. 29–

தமிழக சட்டசபை தேர்தல், கடந்த ஏப்ரல் 23–ந்தேதி ஒரே கட்டத்தில் நடத்தப்பட்டது. இதனை முன்னிட்டு தேர்தல் ஆணைய உத்தரவின்படி, பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இதன்படி, தமிழகத்திற்கான பொறுப்பு டி.ஜி.பி.யாக சந்தீப் ராய் ரத்தோர் நியமனம் செய்யப்பட்டார்.

இந்த சூழலில், தேர்தல் முடிந்து த.வெ.க. தலைமையில் புதிய




அரசு பொறுப்பேற்று உள்ளது. இந்நிலையில், தமிழகத்தின் புதிய டி.ஜி.பி. பதவிக்காக ராஜீவ் குமார், சந்தீப் ராய் ரத்தோர் மற்றும் மகேஷ் குமார் அகர்வால் ஆகிய 3 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான பட்டியல் யு.பி.எஸ்.சி.க்கு அனுப்பப்பட்டது.

இது தொடர்பாக டெல்லியில் நடந்த கூட்டத்தில் இந்த 3 பேர் கொண்ட பட்டியலுக்கு யு.பி.எஸ்.சி. ஒப்புதல் அளித்தது. அவர்கள் 3 பேரில் ஒருவர் விரைவில் டி.ஜி.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் தமிழகத்தின் புதிய டி.ஜி.பி. யார் என்பது குறித்த முக்கிய அறிவிப்பு இன்று வெளியாகிறது. புதிய டி.ஜி.பி. பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் மகேஷ் குமார் அகர்வாலுக்கு அதிக வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக தமிழக காவல் துறையில் 3 ஐ.பி.எஸ். அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். இதுபற்றி தமிழ்நாடு அரசு பிறப்பித்த உத்தரவின்படி, லஞ்ச ஒழிப்பு துறை இயக்குநராக அருண் நியமனம் செய்யப்பட்டார். சென்னை காவல் துறை ஆணையராக இருந்த அருணை, தேர்தல் ஆணையம் காத்திருப்போர் பட்டியலில் வைத்திருந்தது.

இதேபோன்று, சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி.யாக டி.எஸ். அன்பு நியமனம் செய்யப்பட்டார். நிர்வாக ஏ.டி.ஜி.பி.யாக மகேஷ் குமார் தயாள் நியமனம் செய்யப்பட்டார். இதில், தமிழக சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி.யாக சந்தீப் ராய் ரத்தோர் பதவி வகித்து வருகிறார். அவருக்கு அடுத்தபடியாக உயரிய பதவியான சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி.யாக டி.எஸ். அன்பு நியமிக்கப்பட்டுள்ளார்.

# “சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையை தொடங்கி வைக்கவே முடியாத விஜய், பெண்களின் பாதுகாப்பை எப்படி உறுதி செய்வார்?” - டி.டி.வி. தினகரன்!

சென்னை, மே 29–

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;–

வயது, பாலினம், மனிதாபிமானம் என எதையுமே பொருட்படுத்தாமல் 10 வயது சிறுமியில் தொடங்கி மூதாட்டிகள் வரை அரங்கேறும் பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள்– சட்டம் ஒழுங்கை பேணிக்காப்பதில் தவெக ஆட்சி நிர்வாகத்தின் கையாலாகத்தனத்தை



வெளிச்சம் போட்டு காட்டுகின்றன. முதல்–அமைச்சராக ஜோசப் விஜய் அவர்கள் பொறுப்பேற்றவுடன் கையெழுத்திட்ட மூன்று திட்டங்களில் முதன்மைத் திட்டமான சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையை தொடங்கி வைக்கவே முடியாத ஜோசப் விஜய் அவர்கள் பெண்களின் பாதுகாப்பை எப்படி உறுதி செய்வார் ? புதிய டிஜிபி நியமனத்திற்கு பின்பு தான் இந்த நிகழ்வு நடக்கும் என்று சொல்லப்படும் தகவல் உண்மையென்றால், தமிழகத்தில் குதிரை பேர அரசு எதற்கு ? இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடைபெற்றது அக்னி.. வெயிலின் தாக்கம் நீடிக்கும்!

சென்னை, மே. 29–

கடந்த ஏப்ரல் மாதம் கோடை காலம் தொடங்கியது. கோடை காலத்தின் உச்சக்கட்டம் என்று வர்ணிக்கப்படும் அக்னி நட்சத்திரம் கடந்த 4–ம் தேதி தொடங்கியது. கடந்த சில வாரங்களாகவே தமிழகத்தின் பல மாவட்டங்களில் வெப்பநிலை 43 டிகிரி செல்சியஸ் வரை பதிவாகியது.



24 நாட்களாக போட்டு தாக்கிய அக்னி வெயில் இன்றுடன் (28–ம் தேதி) விடை பெற்றது.

ஆனாலும் கோடை வெயிலின் தாக்கம் விடாப்பிடியாக இருக்கிறது. இந்த வெயிலின் தாக்கம் இன்னும் சில நாட்கள் நீடிக்கும் என்று தெரிவித்துள்ளது வானிலை ஆய்வு மையம்.

அடுத்த மாதம் ஜூன் மாதம் முதல் வாரத்தில் சற்று வெப்பம் குறையலாம். அதன் பிறகு படிப்படியாக கோடை வெயிலின் தாக்கம் குறையும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

# கர்நாடகத்தில் 4 துணை முதல்வர் பதவி?

கர்நாடகா, மே. 29–

கர்நாடகத்தில் டிகே சிவக்குமார் தலைமையில், புதிதாக அமையவுள்ள அமைச்சரவையில் 4 பேருக்கு துணை முதல்வர் பதவி வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தபோது, முதல்வர் பதவிக்கு சித்தராமையா, டி.கே. சிவகுமார் இடையே கடுமையான போட்டி நிலவியது.

இருவரையும் சமாதானப்படுத்திய காங்கிரஸ் மேலிடம், சுழற்சி முறையில் இருவரும் தலா இரண்டரை ஆண்டுகால முதல்வர் பதவி வகிக்கும் சமரச திட்டத்தை ஏற்று, சித்தராமையா



முதல்வரானார்.

மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில், காங்கிரஸ் மேலிடத்தின் உத்தரவுகளை ஏற்று கர்நாடகத்தின் நீண்ட கால முதல்வர் என்ற பெருமையுடன் சித்தராமையா, தனது ராஜிநாமா கடிதத்தை ஆளுநர் மாளிகையில் நேற்று (மே 29) வழங்கினார்.

அதைத்தொடர்ந்து இன்று (மே 30) அந்த ராஜிநாமா கடிதம் ஏற்கப்பட்டு, கர்நாடக அமைச்சரவையைக் கலைத்து ஆளுநர் தாவர்சந்த் கெலாட் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், நேற்று மாலை தில்லி சென்ற கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார், அமைச்சரவை மாற்றம் குறித்து ராகுல் காந்தி மற்றும் மல்லிகார்ஜுன் கார்கே ஆகியோரை சந்திப்பார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சித்தராமையா அமைச்சரவையில் உள்ள பல அமைச்சர்களுக்கு டி.கே. சிவகுமார் தலைமையிலான அமைச்சரவையில் இடம் கிடைக்க வாய்ப்பில்லை என கர்நாடக காங்கிரஸ் கட்சியின் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், இந்த அமைச்சரவையில் நான்கு துணை முதல்வர்கள் நியமிக்கப்படலாம் எனகட்சிவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சித்தராமையாவின் மகனும் சட்டமேலவை உறுப்பினருமான யதீந்திரா, டி.கே. சிவகுமார் அமைச்சரவையில் சேர்க்கப்படுவார் என்றும், தனது தந்தையின் பாரம்பரியத்தை தொடரும் வகையில் அவருக்கு அமைச்சரவையில் மிக முக்கிய பொறுப்பு வழங்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்கா-சீனா மோதினால்...லண்டன் நிறுவனம் பகீர் அறிக்கை!

லண்டன், மே. 29–

தைவான் விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் சீனா இடையே போர் மூண்டால், அது உலகையே அழிக்கும் அணுஆயுதப் போராக மாற வாய்ப்புள்ளதாக லண்டன் பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது. சிங்கப்பூரில் இன்று நடைபெற உள்ள சர்வதேச பாதுகாப்பு மாநாட்டுக்கு முன்னதாக இந்த அதிர்ச்சி அறிக்கை வெளியாகி யுள்ளது.

ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் புதிய



அணுஆயுதப் போட்டி தீவிரமடைந்து வருவதாகவும், நாடுகள் தங்களது அணு ஆயுத பலத்தை ரகசியமாக அதிகரித்து வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.இரு நாடுகளும் பரஸ்பரம் தங்களின் கட்டுப்பாட்டு மையங்களை தாக்க முற்படும்போது, போரை கட்டுப்படுத்த எந்த ஒரு பாதுகாப்பு விதியும் இல்லாததால் அணு ஆயுத மோதல் தவிர்க்க முடியாததாகிவிடும் என பாதுகாப்பு நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போதைய நிலவரப்படி, அமெரிக்கா மற்றும் ரஷியாவிடம் முறையே 3 ஆயிரத்து 700 மற்றும் 4 ஆயிரத்து 400 அணு ஆயுதங்கள் உள்ள நிலையில், சீனா தனது அணுஆயுதங்களை அதிவேகமாக அதிகரித்து வருகிறது.

# தென்மேற்கு பருவமழை எப்படி இருக்கும்? வானிலை மையம் விளக்கம்!

சென்னை, மே. 29–

தென்மேற்கு பருவமழை தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெள்ளிக்கிழமை விளக்கம் அளித்துள்ளது.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் மே மாதம் மூன்றாவது வாரத் தொடக்கத்திலேயே தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளது. பல்வேறு இடங்களில் மழை தீவிரமடைந்துள்ளது.

உத்தரப் பிரதேசம், உத்தரகண்ட், ஒடிஸா உள்ளிட்ட மாநிலங்களுக்கு இன்று பலத்த காற்றுடன் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தென்மேற்கு பருவமழை குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

”நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழைக் காலத்தில் வழக்கமாக பெய்யும் மழை அளவானது, இந்தாண்டு சராசரியாக 90 சதவிகிதமாக இருக்கக் கூடும்.

இந்த பருவமழைக் காலத்தில் வடகிழக்கு மாநிலங்களில் இயல்பான மழை அளவைப் பெற வாய்ப்புள்ளது. எஞ்சிய பகுதிகளில் இயல்பைவிட குறைவான மழையே பெய்யக்கூடும்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 13 அன்று வானிலை மையம் வெளியிட்ட அறிவிப்பில், தென்மேற்கு பருவமழைக் காலத்தில் சராசரி மழை அளவில், 92 சதவிகிதம் பெய்யக் கூடும் எனத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# சிறைவாசம் முதல் சிம்மாசனம் வரை.. டி.கே.சிவக்குமாரின் அரசியல் பயணம்!

பெங்களூரு, மே. 29–

முதல்–மந்திரி பதவியை சித்தராமையா ராஜினாமா செய்துள்ளதையடுத்து டி.கே. சிவக்குமார் புதிய முதல்–மந்திரியாக பதவியேற்க உள்ளார். புதிய முதல்–மந்திரி பதவி ஏற்பு விழா வருகிற 1–ந் தேதி நடைபெற வாய்ப்பு உள்ளதாக சொல்லப்படுகிறது.

‘‘கனகபுரா பண்டே’ (பண்டே என்றால் பாறை என்று அர்த்தம்) என பெயர் பெற்ற டி.கே.சிவக்குமார், 1962–ம் ஆண்டு கனகபுராவில் பிறந்தார். அவர் தனது தொடக்க காலத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் பணியாற்றினார். அதன்பிறகு பெங்களூரு பசவனகுடியில் உள்ள நேஷனல் கல்லூரியில் படிக்கும்போது மாணவர் காங்கிரசில் சேர்ந்து பணியாற்றினார். அவர் தனது 23–வது வயதில் 1985–ம் ஆண்டு சாத்தனூர் தொகுதியில் முன்னாள் பிரதமர் தேவேகவுடாவுக்கு எதிராக சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். அதன் மூலம் அவர் பெயர் பெற்றார்.



அதன் பிறகு 1989–ம் ஆண்டு மீண்டும் அவர் அதே சாத்தனூர் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று எம்.எல்.ஏ. ஆனார். 1991–ம் ஆண்டு அவர் சிறைத்துறை மந்திரியாக நியமிக்கப்பட்டார். இளம் வயதில் மந்திரி பதவியை அடைந்தார். அதைத்தொடர்ந்து 1994, 1999, 2004 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டசபை தேர்தல்களிலும் அவர் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி**

தொகுதி மறுவரையறைக்கு பிறகு சாத்தனூர் தொகுதி கனகபுரா தொகுதி என்று பெயர் மாற்றம் பெற்றது. அதைத்தொடர்ந்து கடந்த 2008–ம் ஆண்டு கனகபுரா தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதன் பிறகு 2013, 2018, 2023–ம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களிலும் அவர் வெற்றி பெற்றார்.

சித்தராமையா முதல் முறையாக முதல்–மந்திரியாக (2013–18) இருந்த போது அவரது மந்திரிசபையில் மின்சாரத்துறை மந்திரியாக டி.கே.சிவக்குமார் பணியாற்றினார்.

1999–ம் ஆண்டு முதல் 2004–ம் ஆண்டு வரை நகர வளர்ச்சித்துறை மந்திரியாகவும் பணியாற்றினார். 2008–ம் ஆண்டு முதல் 2010–ம் ஆண்டு வரை அவர் கர்நாடக காங்கிரஸ் செயல் தலைவராக பணியாற்றினார்.

**நெருக்கடி நிலை**

அந்த நேரத்தில் கட்சியின் மாநில தலைவராக ஆர்.வி.தேஷ்பாண்டே இருந்தார். 2018–ம் ஆண்டு முதல் இதுவரை கர்நாடக காங்கிரஸ் தலைவராக பணியாற்றி வருகிறார். கடந்த 2023–ம் ஆண்டு முதல் தற்போது வரை துணை முதல்–மந்திரியாக இருக்கிறார். 2002–ம் ஆண்டு விலாஷ்ராவ் தேஷ்முக் தைலைமையிலான மராட்டிய மாநில காங்கிரஸ் ஆட்சிக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டது. நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதனால் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் சிலர் கட்சி தாவும் நிலை இருந்தது.

**குதிரை பேரம்**

அந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களை பெங்களூரு அழைத்து வந்து டி.கே.சிவக்குமார் குதிரை பேரத்தில் சிக்காமல் பாதுகாத்து ஆட்சியை தக்க வைக்க உதவினார். இதனால் காங்கிரஸ் மேலிடத்தில் டி.கே.சிவக்குமாருக்கு நற்பெயர் கிடைத்தது. அதன்பிறகு கடந்த 2017–ம் ஆண்டு குஜராத்தில் மாநிலங்களவை தேர்தல் நடைபெற்றது. அங்கு காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் குதிரை பேரத்தில் சிக்கும் நிலை இருந்தது.

இதையடுத்து 42 குஜராத் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களை பெங்களூருவுக்கு அழைத்து வந்து டி.கே.சிவக்குமார் தனது பாதுகாப்பில் தங்க வைத்தார். அவர்களை வெற்றிகரமாக பாதுகாத்து குஜராத்துக்கு அனுப்பி வைத்தார். அந்த நேரத்தில் டி.கே. சிவக்குமாரின் வீடுகளில் வருமான வரி சோதனை நடைபெற்றது. அவரது வீட்டில் சுமார் ரூ.8 கோடி கணக்கில் வராத பணம் சிக்கியது.

**கைது**

இதுதொடர்பாக அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்து டி.கே. சிவக்குமாரை கைது செய்து டெல்லி திகார் சிறையில் அடைத்தது. சுமார் 6 மாதங்கள் அவர் சிறைவாசம் அனுபவித்த பிறகு ஜாமீனில் வெளியே வந்தார். அதன் பின்னர் அமலாக்கத்துறை வழக்கு ரத்து செய்யப்பட்டது. அவர் சிறையில் இருந்தபோது சோனியா காந்தி சிறைக்கு சென்று அவரை சந்தித்து தைரியம் கூறினார்.

நாட்டில் எந்த மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சியில் சிக்கல் ஏற்பட்டாலும் அங்கு பிரச்சினையை தீர்த்து வைக்க டி.கே. சிவக்குமார் கட்சி மேலிடத்தால் அனுப்பி வைக்கப்படுகிறார். அவர் சோனியா காந்தி, ராகுல்காந்தியின் நம்பிக்கைக்குரிய தலைவராக மாறியுள்ளார்.

கடந்த 2013–ம் ஆண்டு அமைந்த காங்கிரஸ் ஆட்சியில் சித்தராமையாவின் மந்திரிசபையில் இடம் பிடிக்க டி.கே.சிவக்குமார் போராடினார். தற்போது அவரையே வீழ்த்திவிட்டு டி.கே. சிவக்குமார் சிம்மாசனத்தில் அமருகிறார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020